இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

கலைஞர் 100 1924 - 2023

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 89 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 21 – செவ்வாய்க்கிழமை 07 நவம்பர் 2023 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 89 : Thiruvalluvar Year - 2054 - Ayppasi 21 - Tuesday 07 November 2023 - Kovai ★★ 8 Pages ₹ 5.00



சென்னை மண்டல வாக்குச்சாவடி பாக முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் பங்கேற்ற கழகத்தினர்!

## ‘இந்தியா’ கூட்டணியின் வெற்றிக்காக – மக்களிடம்

# பா.ஜ.க.வின் உண்மை முகத்தை வெளிப்படுத்திடுவீர்!

### சென்னை மண்டல பாக முகவர்கள் கூட்டத்தில் முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை- அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாசித்தார்!

**திருவள்ளூர், நவ. 7 -**

**“இந்தியா” கூட்டணியின் வெற்றிக்காக மக்களிடம் பா.ஜ.க. வின் உண்மை முகத்தை வெளிப்படுத்துவீர்” என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் திருவள்ளூரில் நடைபெற்ற சென்னை மண்டல வாக்குச் சாவடி பாக முகவர்கள் பயிற்சி பாசறைக் கூட்டத்தில் காணொலி மூலமாக உரையாற்றும்போது கூறினார். மு.க. ஸ்டாலின் அவர்களின் அவ்வுரையை கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அக் கூட்டத்தில் வாசித்தார்.**

கழகத்தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5-11-2023) திருவள்ளூரில் நடைபெற்ற சென்னை மண்டல வாக்குச் சாவடி பாக முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் உடல்நிலை காரணமாகக் காணொலி மூலமாகக் கலந்துகொண்டு கீழ்க்காணுமாறு பேசினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

அனைவருக்கும் வணக்கம்.

திடீரென்று காய்ச்சலும் தொண்டை வலியும் எனக்கு ஏற்பட்டுவிட்ட காரணத்தால் இந்த நிகழ்ச்சிக்கு நேரடியாக வந்து உங்களை எல்லாம் சந்தித்து உரையாற்றாமல் போனதற்காக நான் முதலில் என்னுடைய வருத்தத்தை மிகுந்த பணிவோடு உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் தனித்தனியாக சொல்ல வேண்டும் என்று ஆசை, ஆனால் தொண்டை சரியில்லை. ஒட்டுமொத்த அத்தனை பேருக்கும், இதில் உண்மையாக பாடுபட்டு பணியாற்றிய நம்முடைய கட்சி உடன்பிறப்புகள், சகோதரர்கள், நண்பர்கள், நிர்வாகிகள், பல்வேறு அணிகளைச் சார்ந்தவர்கள், மாவட்டச் செயலாளர்கள் எல்லாவற்றிற்கும் மேல் தலைவர் கலைஞர் அவர்களின் அன்பு உடன்பிறப்புகள் அத்தனை பேருக்கும் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியை, வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அங்கு வரவில்லை என்று சொன்னாலும் என்னுடைய நினைவுகள் எல்லாம் அங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது... எப்படி சென்று கொண்டிருக்கிறது என்றுதான் என்னுடைய சிந்தனை எல்லாம் இருந்தது. தொடர்ந்து விசாரித்துக் கொண்டிருந்தேன். அதனால் நீங்கள் யாரும் என்னைத் தவறாக நினைத்துக் கொள்ள மாட்டீர்கள் என்று கருதுகிறேன். அதிகம் பேசக் கூடாது என்று மருத்துவர்கள் கட்டாயப்படுத்தி இருக்கிறார்கள். அதை எல்லாம் மீறி வந்து இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறேன். இப்போது என்னுடைய பேச்சைச் சுருக்கமாக தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் படிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (05.11.2023) திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற, சென்னை மண்டல கழக வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறைக் கூட்டத்தில் காணொலி காட்சி வாயிலாக உரையாடினார். முதலமைச்சர் அவர்களது அவ்வுரையை, கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாசித்தார். இந்நிகழ்ச்சியில், கழக பொருளாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் தாயகம் கவி, ஆஸ்டின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**உதயநிதி ஸ்டாலின் பேச்சு!**

நிகழ்வில் கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் படித்த கழகத் தலைவர் அவர்களின் உரை பின் வருமாறு:-

காத்திருக்கும் நாடாளுமன்றக் களத்தில், கனிந்து வரும் வெற்றிக் கனியைப் பறிக்க - விளைந்து நிற்கும் வெற்றியை வீடு சேர்க்க -நாடாளுமன்றத் தேர்தல் பணிக்கான தொடக்கப்புள்ளியான இந்த வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் கூட்டம், திருச்சி - இராமநாதபுரம் - திருப்பூர் - திருவண்ணாமலையைத் தொடர்ந்து, இன்று திருவள்ளூரில் நடைபெறுகிறது.

### ரெய்டு மிரட்டல்களுக்கெல்லாம் தி.மு.க. பயப்படாது

இந்த மாநாட்டை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார் ராணிப்பேட்டை காந்தி அவர்கள். ராணிப்பேட்டை காந்தி அவர்களை திருவள்ளூர் காந்தி என்றே இன்றைக்கு சொல்லலாம். அந்தளவிற்கு இங்கேயே இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

**சிறப்பாகச் செயல்படும் அமைச்சர் காந்தி!**

காந்தி அவர்களிடம் ஒரு பணியைக் கொடுத்தால், அதைச் சிறப்பாகத்தான் செய்வார். இதனை இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாகப் பார்த்து பாராட்டிக்கொண்டு வருகிறேன். அவர் மனதில் பட்டதை பட்டென்று சொல்வார்; என் மனதில் நினைப்பதை சட்டென்று செய்வார். அதுதான் காந்தி! அவருக்கு உறுதுணையாக இருந்த திருவள்ளூர் மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பாராட்டுகள்! வாழ்த்துகள்.

இன்று காலை முதல்,

* ‘வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களின் கடமைகளும் பணிகளும்’ என்ற தலைப்பில், மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ அவர்களும்,

* ‘வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணிகள் மற்றும் அதன் முக்கியத்துவம்’ குறித்து, செயல்வீரர் தா.மோ. அன்பரசன் அவர்களும்,

* ‘சமூக வலைத்தளங்களின் பயன்பாடு, செயல்படுத்த வேண்டிய முறைகள்’ குறித்து, திராவிட இயக்க எழுத்தாளர் சகோதரர் லெனின் அவர்களும்,

* கழகத்தின் வரலாறு, அடிப்படைக் கொள்கைகள், திராவிட இயக்கத்தின் கோட்பாடுகள், நவீன தமிழ்நாட்டை உருவாக்க நாம் எடுத்த முயற்சிகள், திராவிட மாடல் ஆட்சி ஆகியவை குறித்து,

நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களும், எதார்த்த பேச்சாளர் - திராவிடப் பற்றாளர் இயக்குநர் கரு.பழனியப்பன் அவர்களும் என காலை முதல் இவர்கள் மூலமாக கொள்கை வழிகாட்டுதலும், தேர்தல் பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கிறது.

இவையெல்லாம் இந்தத் தேர்தலுக்கு மட்டுமல்ல, எல்லாத் தேர்தலுக்கும் பயன்படும். இது எல்லாவற்றையும் மனதில் வைத்து நீங்கள் செயல்பட வேண்டும்.

**மாவட்டக் கழகச் செயலாளர்களுக்குப் பாராட்டு!**

இன்று 11 மாவட்டக் கழகங்களில் இருந்து, 11 ஆயிரத்து 569 பேர், ஆற்றல்மிகு மாவட்டக் கழகச் செயலாளர்களால் அழைத்து வரப்பட்டுள்ளீர்கள். இதனை ஒருங்கிணைத்த,

* திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் சா.மு.நாசர்

* திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன்

* திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.சந்திரன்

* சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 07-11-2023

# மக்கள் ஏன் தெரிந்து கொள்ளக் கூடாது?

**“எங்களுக்கு யார் நன்கொடைகள் வழங்கியது என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை” - என்ற ‘ஊழல் மலிந்த’ பதிலை ஒன்றிய பா.ஜ.க. அரசு உச்சநீதிமன்றத்தில் சொல்லி இருக்கிறது. இதுதான் பா.ஜ.க. அரசின் உண்மைத் தன்மை ஆகும்.**

தேர்தல் பத்திரங்களுக்கு எதிரான வழக்கு விசாரணை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி எஸ்.ஏ. சந்திரசூட் தலைமையிலான 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு முன் நடைபெற்றது.

வழக்கறிஞர் கபில் சிபல் உள்ளிட்டோர், தேர்தல் பத்திரம் மூலம் நன்கொடை பெரும் அரசியல் கட்சிகள் அதனை தேர்தலுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற விதிமுறை இல்லை என்றும், அதனை எதற்கு வேண்டுமானாலும் செலவு செய்யும் நிலை உள்ளதாக தெரிவித்தனர். தேர்தல் பத்திர நடைமுறையை முழுமையாக ரத்துசெய்ய வேண்டும் என்று அவர்கள் வாதிட்டனர்.

ஒன்றிய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா அப்போது என்ன சொன்னார் தெரியுமா?

**“நன்கொடை யார் வழங்கியுள்ளனர் என்பது அதனைப் பெறும் கட்சிக்கு மட்டுமே தெரியும். மற்ற கட்சிகளுக்கு தெரியாமல் ரகசியம் காப்பதுதான் இந்த திட்டம்” என்று குறிப்பிட்டார். அப்போது, குறுக்கிட்ட தலைமை நீதிபதி எஸ்.ஏ.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, ‘‘அப்படியானால் வாக்காளர்களின் உரிமை என்ன? ஏன் நன்கொடை விபரங்களை வாக்காளர்கள் தெரிந்துகொள்ளக் கூடாது?” என்று கேள்வி எழுப்பினர்.**

**தேர்தல் ஆணைய வழக்கறிஞரிடமும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் பல்வேறு கேள்விகளை எழுப்பினார்கள்.” தேர்தல் பத்திர நடைமுறையால் பாதிப்பு எதுவும் உள்ளதா? அது குறித்து ஆய்வுகள் எதுவும் நடத்தப்பட்டதா? இதுவரை பெறப்பட்டுள்ள நன்கொடை தொகை எவ்வளவு? என்பது உள்பட பல கேள்விகளுக்கு தேர்தல் ஆணையம் உரிய பதிலை அளிக்கவில்லை” என நீதிபதிகள் தெரிவித்தனர்.**

ஒன்றிய அரசின் அட்டர்னி ஜெனரல் வாதிடும் போது, “பொது மக்கள் எதை வேண்டுமானாலும் எதைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் நிலை இருக்கக் கூடாது. நியாயமான கட்டுப்பாடுகள் தேவை” என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

**“சில நிறுவனங்கள் மொத்த வருவாயையும் அரசியல் நன்கொடையாக வழங்குவதை அனுமதிப்பது ஏன்? முன்பு நிகர லாபத்தில் ஒருபகுதிதான் நன்கொடையாக வழங்க முடியும் என்ற விதிமுறை இருந்தது. தற்போது லாபம் இல்லாத நிறுவனங்கள் கூட மொத்த வருவாயையும் நன்கொடையாக வழங்க முடியும் என்று மாற்றப்பட்டுள்ளது. நிறுவனம் நடத்துவது நன்கொடை வழங்குவதற்காக அல்ல. இதனை சரிசெய்ய நிறுவனங்கள் சட்டத்தில் திருத்தம் தேவை. இதுபோன்ற பிரச்சினைகளை சரிசெய்ய ஒரு சமநிலையான நன்கொடை திட்டத்தை உருவாக்கலாம். அது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை அரசும், நாடாளுமன்றமும்தான் முடிவு செய்ய வேண்டும்” என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர்.**

இதனைத் தொடர்ந்து, கடந்த செப்டம்பர் 30 ஆம் தேதி வரை வரையிலான நன்கொடை மொத்த விபரங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் அரசியல் கட்சிகள் தாக்கல் செய்த விபரங்கள் முழுமையாக இல்லை என்றால் இந்திய ஸ்டேட் வங்கியிடமிருந்து தகவல்களைப் பெற்று 2 வாரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் கூறினர்.

அரசியல் கட்சிகள் தேர்தல் செலவுகளுக்கான நன்கொடைகள் பெறுவதற்கு தேர்தல் பத்திர விற்பனையை ஒன்றிய பா.ஜ.க. அரசு 2018 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தியது. கார்ப்பரேட் நிறுவனங்கள் தங்கள் அடையாளத்தை மறைத்து நன்கொடை வழங்க இது ஊக்கப்படுத்துவதாக உள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டது. இதனை எதிர்த்து சில அமைப்புகள் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது. ஒரு குடிமகனுக்கு இருக்கும் தெரிந்து கொள்ளும் உரிமையை மீறுவதாக இது உள்ளது என்கின்றன இந்த மனுக்கள்.

**2016 முதல் 2022 வரையிலான ஆண்டுகளில் பா.ஜ.க. மட்டும் ரூ.5,272 கோடி நன்கொடை பெற்றுள்ளது. இது மொத்த நிதியில் 58 சதவிகிதம் ஆகும். ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் என்ற அமைப்பு இதனை ஆய்வு செய்து அறிக்கை அளித்துள்ளது. பா.ஜ.க. பெற்றுள்ள ரூ.5,272 கோடியில் 52 விழுக்காடு தொகை தேர்தல் பத்திரங்கள் மூலமாக வந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.**

இதனால்தான் மக்கள் தெரிந்து கொள்ளக் கூடாது என்கிறது பா.ஜ.க.

## காற்று மாசு: டெல்லியில் பள்ளிகளுக்கு விடுமுறை!

புதுடெல்லி, நவ. 7 – டெல்லியில் அதிகரித்து வரும் தொடர் காற்று மாசு காரணமாக அங்கு தொடக்கப்பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

வருகிற 10ம் தேதி வரை அனைத்து அரசு பள்ளிகளுக்கும் விடுமுறை அளித்து டெல்லி அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.



நீலகிரி மாவட்டம், உதகை கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் “நடப்போம் நலம் பெறுவோம்” எனும் 8KM Health walk திட்டத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்து 8 கி.மீ. நடைபயணம் மேற்கொண்டனர். போது இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர், அரசு துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கிழக்கு மண்டல தி.மு.க. நெசவாளர் அணி சார்பில் – கும்பகோணத்தில்

## கலைஞர் நூற்றாண்டு விழா - மாபெரும் கைத்தறி கண்காட்சி - விற்பனை திருவிழா!

### அமைச்சர்கள் க.பொன்முடி - ஆர்.காந்தி - அன்பில் மகேஷ் பொய்யாமொழி - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - சு.கல்யாணசுந்தரம் எம்.பி. பங்கேற்பு!

தஞ்சாவூர், நவ. 7- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணத்தில் கிழக்கு மண்டல தி.மு.க நெசவாளர் அணி சார்பில் நடைபெற உள்ள மாபெரும் கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனை திருவிழாவில் அமைச்சர்கள் பங்கேற்க உள்ளனர்.

இன்று (07.11.2023 - செவ்வாய்க்கிழமை) காலை 09.00 மணிமுதல் மாலை 06.00 மணிவரை நடைபெற உள்ள மாபெரும் கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனை திருவிழா கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் தலைமையில் நடைபெற உள்ளது. மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் டி.ஆர்.அனந்தராமன் வரவேற்புரையாற்ற உள்ளார்.

மாநில நெசவாளர் அணி நிர்வாகிகள் நன்னியூர் இராஜேந்திரன், ஓ.எ.நாகலிங்கம், எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், க.பழனிச்சாமி, காஞ்சி தி. அன்பழகன், பரணி.கே. மணி, நெல்லை.சொ.பெருமாள், கே.எம்.நாகராஜன், சிந்து ரவிச்சந்திரன், வசந்தம் வசந்தகுமார், ஜி.வி.மணிமாறன், ஆ.ராமசாமி, கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை வகிக்க உள்ளனர்.

உயர் கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி, கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. ஆகியோர் கண்காட்சியை தொடங்கி வைத்து சிறப்புரையாற்ற உள்ளனர்.

விழாவில் செ.இராமலிங்கம் எம்.பி., மு.சண்முகம் எம்.பி., சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ., முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ., தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் கா. அண்ணாதுரை எம்.எல்.ஏ., டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., நா.அசோக்குமார் எம்.எல்.ஏ மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகரக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தஞ்சை வடக்கு, மத்தியம், தெற்கு, திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டங்களைச் சார்ந்த நெசவாளர் அணி நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்துகொள்ள உள்ளனர்.

விழா முடிவில் மாவட்ட விவசாய அணித் தலைவர் வி.எஸ்.மோகன் நன்றியுரையாற்ற உள்ளார்.

## அமலாக்கத்துறை சோதனைகளால் தி.மு.க. வை பலவீனப்படுத்த முடியாது!

### தமிழ்நாடு விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கண்டனம்!

சென்னை, நவ.7- தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு இல்லம் மற்றும் நிறுவனங்களில் அமலாக்கத்துறை சோதனை நடத்துவது அற்ப அரசியல் காரணங்களுக்காக என்பதால் இதனை வன்மையாக கண்டிக்கிறேன். பாரதிய ஜனதா கட்சி ஆட்சி செய்யாத மாநிலங்களில் உள்ள அரசுகளை அச்சுறுத்துவதற்கும், பணிய வைப்பதற்கும் அந்த ஆட்சியில் உள்ள கட்சியின் தொண்டர்களை மனச்சோர்வடைய செய்வதற்கும், மோடி அரசு அமலாக்கத்துறை, வருமான வரித்துறை மற்றும் சி.பி.ஐ. போன்ற மத்திய அரசு நிறுவனங்களை பயன்படுத்தி வருவது வாடிக்கையான ஒன்றாகும். அந்த அடிப்படையில் தற்போது பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில் உள்ள அரசு மற்றும் ஆட்சியில் உள்ள அரசியல் கட்சிகளை ஒடுக்குவதற்கும் அமைச்சர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகளை சோர்வடைய செய்வதற்கும் தற்போது சோதனை என்ற பெயரில் ஒன்றிய அரசின் நிறுவனங்களை ஏவி விட்டு இருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியதாகும்.

நடைபெற உள்ள ஐந்து மாநில சட்டப்பேரவை தேர்தல்கள் இதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இந்த மாநிலங்களில் பா.ஜ.க. வெற்றி பெற முடியாது என்பதால் ஆளும் கட்சியின் மீது மக்கள் மத்தியில் ஊழல் முத்திரை குத்தி அதன் மூலம் அரசியல் லாபமடைய மோடி அரசு முயற்சிக்கிறது. இந்த ஐந்து மாநில தேர்தல் முடிவுகள் மோடி அரசுக்கு முடிவுரை எழுத உள்ளது. அதனை தொடர்ந்து நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி மகத்தான வெற்றி பெற உள்ளது.

எனவே இந்த அச்சத்தின் காரணமாக தான் இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகளை அச்சுறுத்திட, அசிங்கப்படுத்திட இப்படிப்



பட்ட கேவலமான செயல்களில் மோடி அரசு ஈடுபட்டு வருகிறது. பாரதிய ஜனதா கட்சியை கருத்தியியல் ரீதியாக விமர்சிப்பதிலும் அந்த கட்சி ஆட்சியை அகற்றிவிட்டு ஒன்றியத்தில் ஜனநாயக அரசை அமைப்பதிலும் மிகுந்த அக்கறை கொண்டு செயல்பட்டு வருபவர் திராவிட முன்னேற்றக் கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் ஆவார். அவருடைய பெரும் முயற்சியால் இன்றைக்கு இந்திய அளவில் உள்ள பல்வேறு கட்சிகளை ஒன்றிணைத்து இந்தியா கூட்டணியை ஏற்படுத்தி உள்ளார்.

எனவே திராவிட முன்னேற்றக் கழகத்தை பலவீனப்படுத்தி விடலாம் என்று கனவு கண்டு அந்த கட்சியின் நிர்வாகிகள், அமைச்சர்கள் மீது தொடர்ந்து சோதனை நடத்தப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் தற்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிறந்த நிர்வாகியும், தளபதியின் சுட்டு விரல் நீட்டுக்கு ஏற்ப காரியங்களை கன கச்சிதமாக செய்து முடிக்கக் கூடிய ஆற்றலுக்கு சொந்தக்காரருமான பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு இல்லம் மற்றும் நிறுவனங்களில் கடந்த இரண்டு நாட்களாக சோதனை நடத்தப்பட்டு வருகிறது. இந்த சோதனைகள் மூலம் அமைச்சர் எ.வ.வேலு பணிய வைக்கலாம் என்று நினைத்தால் அது பகல் கனவாகிவிடும். அவர் ஒரு இரும்பு மனிதர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும், தலைவர் கலைஞர் மற்றும் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் மீதும் அசைக்க முடியாத அன்பு கொண்ட ஒரு அணுக்கத் தொண்டர் ஆவார்.

எனவே பா.ஜ. கட்சியின் இந்த தகுடுதத்தம் வேலைகள் மூலம் அமைச்சர் எ.வ.வேலுவையோ, திராவிட முன்னேற்றக் கழகத்தையோ ஒடுக்கி விட முடியாது. அவர்கள் எமர்ஜென்சி என்ற நெருப்பிலிருந்து வெளியே வந்த பீனிக்ஸ் பறவைகள். மோடி அரசு இப்படிப்பட்ட அசிங்கமான அரசியல் செயல்களால் ஒவ்வொரு நாளும் மக்கள் மத்தியில் நம்பிக்கை இழந்து, உலக அளவில் களங்கத்தை பெற்று வருகிறார் மோடி. ஆளுநர் ரவி, அண்ணாமலை, அரசு எந்திரங்கள் என்று வரிசை கட்டி தி.மு.க.வை வீழ்த்திட நாள்தோறும் முயற்சித்து வருகிறார்கள். அவை அனைத்தும் தி.மு.க.விற்கு பலம் சேர்ப்பவையாகவே அமைந்து வருகிறது. காரணம், இந்த இழிவான அநீதியான செயல்களை மக்கள் கண்டு முகம் சுளித்து வருவதை இந்த நாடு அறியும். மோடி அமித்ஷா கூட்டு சதியான அற்ப அரசியல் ஆதாயத்திற்காக அரசின் நிறுவனங்களை பயன்படுத்துவது வன்மையான கண்டனத்திற்கு உரியதாகும்.

இவ்வாறு பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### காங்கேயம் ஒன்றியம் – ஆலாம்பாடியில்

## 151 பயனாளிகளுக்கு ரூ.1.89 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார் !

காங்கேயம், நவ. 7 - தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் ஆலாம்பாடியில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க கட்டடத்தை திறந்து வைத்து, 151 பயனாளிகளுக்கு ரூ.1.89 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பின்பு மருதுறை ஊராட்சியில் ரூ.34.00 லட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலை பணியினை துவக்கி வைத்து, மருதுறை ஊராட்சி கே.ஜி. வலசு ரோட்டில் நெய்யல் ஆற்றின் குறுக்கே ரூ.7.31 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட உயர் மட்ட பாலத்தினை ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் 04.11.2023 அன்று மாவட்ட ஊரக முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன் தலைமையில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலக்குழுத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், ஆலாம்பாடியில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க புதிய அலுவலக கட்டடத்தை திறந்து வைத்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 3 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவிகளையும், 137 பயனாளிகளுக்கு ரூ.168.92 இலட்சம் மதிப்பீட்டில் கே.சி. பயிர்க்கடனுதவிகளையும், 5 பயனாளிகளுக்கு ரூ.2.52 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்பு கடனுதவிகளையும், 6 பயனாளிகளுக்கு ரூ. 0.60 இலட்சம் மதிப்பீட்டில் பொருளாதார கடனுதவிகள் என மொத்தம் 151 பயனாளிகளுக்கு ரூ.1.89 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகளை வழங்கி, மருதுறை ஊராட்சி கிலாக்காட்டில் கனிமம் மற்றும் சுரங்கம் நிதியின் கீழ் ரூ.34.00 இலட்சம் மதிப்பீட்டில் எல்லை பிள்ளையார் கோவில் முதல் கிலாக்காடு வரையுள்ள மண்சாலையை தார் சாலையாக மாற்றும் பணியினை துவக்கி வைத்து, மருதுறை ஊராட்சி கே.ஜி வலசு ரோட்டில் நெய்யல் ஆற்றின் குறுக்கே நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.7.31 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் உயர் மட்ட பாலத்தினை ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சீனிவாசன், துணைப்பதிவாளர் கந்தசாமி, உதவி செயற்பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) இளம்பூரணம், உதவி பொறியாளர் சரவணக்குமார், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கிருஷ்ணவேணி வரதராஜ், வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சி.கருணை பிரகாஷ், ஊராட்சி மன்றத் தலைவர் செல்வி சிவக்குமார், ஒன்றிய அவைத் தலைவர் ரவி உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



செஞ்சி தொகுதி செஞ்சி பேரூராட்சி சக்கராபுரம் அரசு நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் பெயர் திருத்தம் சிறப்பு முகாமினை அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், வட்டாட்சியர் ஏழுமலை உள்ளனர்.

## கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பில் கழகத்தினர் தீவிரம்!

## சிறப்பு முகாம்கள் அமைத்து களப்பணி மேற்கொண்டனர்!

சென்னை, நவ. 7 -

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் களப் பணியில் கழகத்தினர் தீவிரமாக நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.**

**தேர்தல் ஆணையத்தால் நடைபெற்ற சிறப்பு முகாம்களில் பொதுமக்களுக்கு வழிகாட்டும் வகையில் ஆங்காங்கே கழகத்தினர் முகாம் அமைத்து அவர்களுக்கு ஏற்படும் ஐயப்பாடுகளை நிவர்த்தி செய்தது மட்டுமின்றி, புதியதாக 18 வயது கொண்ட இளைஞர்களை வாக்காளர் பட்டியலில் பெயர் இணைத்திடும் பணியினை மேற்கொண்டனர்.**



இதுபற்றிய விவரம் வருமாறு:-

இந்தியத் தேர்தல் ஆணையம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் வாக்காளர் பட்டியல் புதியதாக தயாரிப்பது வழக்கமான நடைமுறையாகும். அந்த வகையில் இந்த ஆண்டும், இந்தியத் தேர்தல் ஆணையம் வருகிற 2024 ஆம் ஆண்டுஜனவரி1-ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு 18வயது நிறைவடையும் இளைஞர்கள் தங்களது பெயரை சேர்த்திடலாம் என்றும் அறிவித்தது.

மேலும் முகவரி மாற்றம், பெயர் திருத்தம், வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்கம் உள்ளிட்ட திருத்தங்களையும் மேற்கொள்ளலாம் என்றும் இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்து இருந்தது.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு அரசு - தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் புதியதாக தயாரித்திட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

**தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளுடன் தேர்தல் அதிகாரி ஆலோசனை!**

அதன்படி விரைவு வாக்காளர் பட்டியல் வெயிடுவதற்கு முன்பு தமிழ்நாடு அரசின் தேர்தல் அதிகாரி சத்ய பிரதா சாகு, தி.மு.க. உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

இதனையடுத்து வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் களப் பணியில் மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி வேண்டுமாய் தலைமைக் கழகம் சார்பில் கடந்த 30.9.2023 அன்று ஒரு அறிவிப்பினை வெளியிட்டது. இந்நிலையில்தான் தமிழ்நாடு தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று விரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டது.

**கழகத் தலைவரின் கடிதம்!**

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 2.11.2023 அன்று "களம் காணட்டும் கழகப் படை" என்ற தலைப்பில் 'உங்களில் ஒருவன்' கழகத்தினருக்கு எழுதிய கடிதத்தில்,

**"வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியினைத் தேர்தல் ஆணையம் மேற்கொள்ளும் நாட்களில் நம்முடைய கழகத்தினர் கண்ணும் கருத்துமாக இருந்து, யார் யார் உண்மையான வாக்காளர்கள், யார் யார் போலியானவர்கள், இறந்து போனவர்கள் எத்தனை பேர் இடம் மாறியவர்கள், எத்தனை பேர், இரண்டு இடங்களில் பெயர் கொடுத்திருப்போர் யார் என்பது உள்ளிட்டவற்றைக் கவனித்திட வேண்டும்"** என்று குறிப்பிட்டு இருந்தார்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலையடுத்து மாவட்டச் செயலாளர்கள், மாநகரச் செயலாளர்கள், பகுதிக் கழக, வட்டக் கழக, கிளை கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் களப் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

**68 ஆயிரம் சிறப்பு மையங்கள்!**

குறிப்பாக 4, 5.11.2023 - சனி, ஞாயிறு தேதிகளில் தமிழ்நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் பெயர் சேர்ப்பு, திருத்தம், நீக்கம் உள்ளிட்ட பணிகளுக்காக சிறப்பு முகாம்கள் நடைபெற்றன. சுமார் 68,000 வாக்குச்சாவடி மையங்களில் 2வது நாளாக நேற்று முன்தினம் சிறப்பு முகாம்கள் நடைபெற்றன. விடுமுறை தினம் என்பதால் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு, நீக்கம், திருத்தம் போன்ற பணிகளுக்காக ஏராளமானோர் விண்ணப்பங்களை அளித்தனர்.

இதில் 1.1.2024க்குள் புதியதாக 18 வயது நிறைவடைந்தவர்கள் புதியதாக தங்கள் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்திட முனைப்புடன் ஈடுபட்டனர்.

> **"தேர்தல் கமிஷன் அமைக்கப்பட்டுள்ள பூத்களுக்கு அருகில் கழகத்தினர் டேபிள் அமைத்து அதில் கழகக் கொடியை வைத்து பொதுமக்களுக்கு குறிப்பாக புதிய வாக்காளர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்து உதவி புரிந்தனர்."**



இம்முகாம்களில் இறந்தவர்களின் பெயர்களை நீக்குதல், முகவரி மாற்றம், பெயர் திருத்தம் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**வாக்காளர் பட்டியல் பூத் அமைப்பு!**

தேர்தல் கமிஷன் அமைக்கப்பட்டுள்ள பூத்களுக்கு அருகில் கழகத்தினர் டேபிள் அமைத்து அதில் கழகக் கொடியை வைத்து பொது மக்களுக்கு குறிப்பாக புதிய வாக்காளர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்து உதவி புரிந்தனர்.

**புதிய வாக்காளர்களை சேர்த்தனர்!**

அதனடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ந்தேதி தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு 18 வயது நிறைந்தவர்களின் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்கள் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர் கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை கழகத்தினர் மேற்கொண்டனர்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம் செய்ய, திருத்தங்கள் செய்ய, இடமாற்றம் செய்ய, அல்லது ஆதார் எண்ணை இணைக்க தகுதியுள்ள குடிமக்களுக்கு படிவங்கள் 6, 6பி, 7, 8 ஆகியவற்றைப் பூர்த்தி செய்து வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் மற்றும் வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளித்திட பொதுமக்களுக்கு கழகத்தினர் உதவி புரிந்தனர்.

**மேலும் இரு முகாம்கள்!**

கடந்த இரு தினங்கள் (4, 5.11.2023) நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சேர்த்தல், நீக்கல் குறித்த சிறப்பு முகாம்கள் போல் வருகிற 18.11.2023 - மற்றும் 19.11.2023 ஆகிய சனி ஞாயிற்றுக்கிழமைகளிலும் மேலும் இரு சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கின்றன. இதிலும் புதிய வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கிட என்னும் களப் பணியில் ஈடுபட கழகத்தினர் தங்களை தயார்படுத்திக் கொண்டுள்ளனர்.

அதுமட்டுமின்றி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம் செய்ய www.nvsp.in என்ற இணைய தளம் மூலமாகவும் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## தொடர் மழை காரணமாக

# தமிழ்நாட்டில் அணைகள் நிரம்புகின்றன!

## விவசாயிகள் மகிழ்ச்சி

சென்னை, நவ.6-

தொடர் கனமழை காரணமாக தமிழ்நாட்டில் உள்ள அணைகள், நீர்நிலைகள் வேகமாக நிரம்புவதால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள தால், தமிழ்நாடு முழுவதும் பரவலாக கடந்த சில நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. குறிப்பாக, நெல்லை, கன்னியாகுமரி, தேனி, நீலகிரி, கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் கன மழை கொட்டி தீர்த்து வருகிறது. இதனால் அந்த மாவட்டங்களில் உள்ள அணைகள், மற்றும் நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே உள்ள வைகை அணையின் நீர்மட்டம், தொடர் கனமழை காரணமாக அதிகரித்தபடி இருந்தது. இந்நிலையில் மொத்த முள்ள 71 அடியில் நீர்மட்டம் 66 அடியை தாண்டியது.

இதனால் பாதுகாப்பு கருதி தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களுக்கு முதல் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள் ளது.

**வெள்ள அபாய எச்சரிக்கை!**

இதேபோல் பெரியகுளம் அருகேவுள்ள சோத்துப்பாறை அணை நிரம்பி வழிவதால் வராக நதி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து வராக நதி கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. நீர் பிடிப்பு பகுதியில் கடந்த 2 நாட்களாக தொடர்ந்து பெய்த கனமழைக் காரணமாக கம்பம் அருகேவுள்ள சுருளி அருவியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பொது மக்களின் பாதுகாப்பு கருதி சுருளி அருவியில் குளிப்பதற்கு வனத்துறை தடை விதித்துள்ளது.

இதேபோல் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த தொடர் கனமழை காரணமாக பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு அணை களின் நீர் மட்டம் உச்ச அளவை எட்டியுள்ளது.

இதனால் தாமிரபரணி, கோதையாறு, பரளி ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.



மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் குத்தாலம் ஒன்றியம் மேல மங்கைநல்லூர் அரசு நடுநிலைப் பள்ளியில் வாக்காளர் பெயர் சேர்த்தல் , நீக்கல், திருத்தம் குறித்த சிறப்பு முகாமை பார்வையிட்டார். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர் மங்கை எம்.சங்கர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் மற்றும் பலர் உள்ளனர்.

---

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, என்.ஆர்.இளங்கோ எம்.பி. பங்கேற்பு!

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க வழக்கறிஞர் அணி ஆலோசனைக்கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் என்.பாஸ்கரன் அறிக்கை!

தஞ்சாவூர், நவ. 7 -

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க வழக்கறிஞர் அணியின் ஆலோசனைக்கூட்டம் 08.11.2023 புதன் அன்று நடைபெற உள்ளதாக மாவட்ட அமைப்பாளர் என்.பாஸ்கரன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் : - வருகின்ற 08.11.203 (நாளை) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கும்பகோணம், காரைக்கால் சாலையில் உள்ள சூரியா மஹாலில் (மேம்பாலம் அருகில்) தஞ்சை வடக்கு மாவட்ட தி,மு.க வழங்கறிஞர் அணியின் நிர்வாகிகள் கூட்டம் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் மாட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, கழகச் சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்ற உள்ளனர்.

அதுசமயம் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து கழக வழக்கறிஞர்களும் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டத்தின் பொருள் : கழக இளைஞர் அணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள், 2024 நாடாளுமன்ற தேர்தல் பணிகள், அணியின் ஆக்கப்பணிகள்.

இவ்வாறு மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் என்.பாஸ்கரன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



திருச்சி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட துறையூரில் வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எல்.ஏ., காடுவெட்டி தியாகராஜன் தலைமையில் தொகுதி தேர்தல் பார்வையாளர் தாமரைக் கண்ணன், துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின்குமார் மற்றும் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தர்மன் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் துறையூர் தொகுதியில் உள்ள அனைத்து நகர, ஒன்றியத்திலுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கான (BLA2) ஆலோசனை கூட்டம் சிவாலயா மண்டபத்தில் நடைபெறற்து. இதில் நகர செயலாளர் மெடிக்கல் முரளி , ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை முத்துச்செல்வன், சரவணன் வீரபத்திரன் மற்றும் ,அசோகன் மற்றும் கிட்டப்பா, பூபதி, கலை கஸ்டம்ஸ் மகாலிங்கம்,நகரத் தலைவர் செல்வராணி மலர்மன்னன், ஒன்றியக் குழு சேர்மன் சரண்யா மோகன் தாஸ், கனகராஜ், உட்பட அனைத்து கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

## துறைமுகம் மேற்கு 54வது வட்ட செயல்வீரர்

# அருண்குமார் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 7 -

துறைமுகம் மேற்குப் பகுதி 54-வது வட்டக் கழக செயல் வீரர் அருண்குமார் மறைவு குறித்து முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்தின் துறைமுகம் மேற்கு பகுதி, 54-வது வட்டத்தைச் சேர்ந்த செயல்வீரர் அருண்குமார் திருவள்ளூரில் நடைபெறும் சென்னை மண்டல வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த நிலையில் மாரடைப்பு ஏற்பட்டு மரணம் அடைந்தார் என்று அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

அருண்குமார் அவர்களை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் சென்னை கிழக்கு மாவட்டக் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.





ஈரோடு தெற்கு மாவட்டம் பெரியார் நகர் பகுதி கழக செயலாளர் அக்னி சந்துரு ஏற்பாட்டில் பெரியார் நகர் அ.தி.மு.க. முன்னாள் மாமன்ற உறுப்பினர் மகேஸ்வரி மற்றும் அ.தி.மு.க. வட்டக் கழகச் செயலாளர் குமாரவேலு தலைமையில் 50க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினர் அக்கட்சியிலிருந்து விலகி மாவட்டச் செயலாளரும் , அமைச்சருமான சு.முத்துசாமி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். நிகழ்வில் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### அமைச்சர்கள் கீதாஜீவன் – டி.ஆர்.பி.ராஜா முன்னிலையில்

# கரூரில் 'தொலைநோக்கு சிந்தனையாளர் கலைஞர்' - கருத்தரங்கம்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி சிறப்புரை!

*கரூர், நவ. 7 -*

கரூர் மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 'தொலைநோக்கு சிந்தனையாளர் கலைஞர்' எனும் கருத்தரங்கம் கரூர் அட்லஸ் கலையரங்கில் நடைபெற்றது. ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி சிறப்புரையாற்றினார். சமூக நலம், மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன், தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா முன்னிலையில் கருத்தரங்கம் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசுகையில், கலைஞர் கிட்டத்தட்ட 75 ஆண்டுகள் அரசியலில் மட்டுமல்லாமல் சமூக பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்காக உழைத்திருக்கின்றார்கள். பொதுமக்களின் எதிர்காலத்தை கொண்டு சிந்தித்து ஜனநாயகத்திற்காக குரல் கொடுத்தவர். அவசர கால கட்டத்தில் ஜனநாயகத்திற்குஆபத்துவருகின்றதோ அப்போதெல்லாம் முதல் குரலாக அங்கே தலைவர் கலைஞர் அவர்கள் குரல் தான் ஒலித்துக் கொண்டு இருக்கும். பல்வேறு கலவரங்கள் வந்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார். எல்லா மக்களும் சமத்துவமாக வாழ்வதற்கு ஒரு பெரிய சிற்பியாகவும், சிந்தனையாளராகவும் செயல்பட்டவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான். ஐந்து முறை முதலமைச்சராக இருந்திருக்கின்றார்கள். பல்வேறு திட்டத்தை தீட்டி இருக்கின்ற பொழுதெல்லாம். கடந்த காலத்தையும் சிந்திக்க வேண்டும். நிகழ்காலத்தையும் பார்க்க வேண்டும் நமக்கு எதிர்காலம் யார் மக்களுக்கு நன்மையை செய்வார்கள் என்று எதிர்நோக்கி பார்க்க வேண்டும்.

இளைஞர்களாகிய நீங்கள். நாம் அனைவரும் இவ்வளவுதூரம் கல்வி கற்றத்திற்கு முக்கிய காரணமானவர் பெருந்தலைவர் காமராஜர் மற்றும் கலைஞர் அவர்கள் தான். ஆனால் கடந்த காலங்களில் கிராமப்புறங்களில் ஐந்தாவது வகுப்பு வரை குழந்தைகளை படிக்க வைத்து விட்டு வீட்டில் இருந்து கொள்வார்கள். அதற்கு மேல் அவர்களுக்கு திருமணம் செய்து வைத்து விடுவார்கள். அந்த கால கட்டங்களை மாற்றி பெண்கள் கல்வி பயில வேண்டும் அதுவும் எட்டாம் வகுப்பு வரை கண்டிப்பாக

படிக்க வேண்டும் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் பெண்களுக்கு திருமணத்திற்கு 5000 உதவித் தொகை தருவேன் என நாட்டிலேயே முதன் முதலாக வழங்கி படிக்க வைத்தவர் கலைஞர். வீடு இல்லாதவர்களுக்கு கலைஞர் ஆதிதிராவிடர் நலத்துறை சார்ந்த அவர்களுக்கு 1 இலட்சம் வீடுகளை 1969 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் முதலாக கட்டிக் கொடுத்தார்கள். நகரங்களில் குடிசையில் வாழும் மக்களுக்கு அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தார்கள். அதே போல் 2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடன் முதியோர்களுக்கு தன்னம்பிக்கையுடன் இருப்பதற்காக மாதம் ரூ.1000 உதவி தொகையினை வழங்கியவர். அனைத்து நபர்களுக்கும் சொந்தமாக குடியிருப்பதற்காக இடமில்லாதவர்களுக்கு அல்லது புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கு 2006 ஆம் ஆண்டில் சட்டசபையில் வாக்குறுதி அளித்தது போல் உடனடியாக இலவசமாக வீட்டுமனை பட்டாவினை வழங்கினார்கள்.

பள்ளிச் சென்று படிப்பதற்கு இலவசப் பேருந்து, உதவித் தொகை போன்ற எண்ணற்ற திட்டங்களை கலைஞர் வழங்கினார். மதிய உணவு திட்டம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கொண்டு வந்தார்கள். அதனை தொடர்ந்து விரிவுபடுத்தி மதிய உணவில் முட்டை வழங்கினார்.

தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் இன்றைக்கு முதலமைச்சர் தளபதி அவர்கள் பொதுமக்களுக்கு எண்ணற்ற திட்டங் களை வழங்கிக் கொண்டே வருகின்றார்கள். ஆக தலைவர் அவர்களுடைய வரலாறை படித்தாலும் கதைகள், கட்டுரைகள். இலக்கியங்கள் போன்ற எண்ணற்ற உரைகள் எழுதிஇருக்கின்றார்கள். சிந்தனைகளை வளர்த்துக்கொண்டு குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும் வாழ்க்கையில் மென்மேலும் வளர வேண்டும் என்றார்.

தொடர்ந்து தொலைநோக்கு சிந்தனையாளர் கலைஞர் மையக்கருத்து பாடலினை.

அமைச்சர் ஐ.பெரியசாமி வெளியிட அமைச்சர்கள் கீதா ஜீவன், முனைவர்.டி ஆர் பி.ராஜா பெற்றுக் கொண்டார்கள்.

இக்கருத்தரங்கில் முதன்மைச் செயலாளர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பி.செந்தில்குமார். நீதியரசர் ஜி.எம்.அக்பர் அலி(ஓய்வு). மாநில சிறுபான்மை ஆணையம் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், மாவட்ட ஆட்சித் தலைவர் மீ.தங்கவேல், சமூகநீதி கண்காணிப்பு குழு தலைவர் .சுப.வீரபாண்டியன். கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள்

இரா.மாணிக்கம் (குளித்தலை) ஆர். இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராய புரம்), கரூர் மாநகராட்சி மேயர் வெ. கவிதா, துணை மேயர் ப.சரவணன், நாஞ்சில் சம்பத், கவிஞர் ரவி சுப்ரமணியன், கவிஞர் மனுஷ்யபுத்திரன், மண்டல தலைவர் கனகராஜ், கல்லூரி மாணவ, மாணவியர், உள்ளாட்சி பிரதிநிதிகள், அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**க. வேல்சாமி**
**நவம்பர் 7 (2007)**



**இளம் வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.**

**நாமக்கல் மாவட்டம், மோகனூர் பகுதியில் முதன்முதலாக பல்வேறு கிளைக் கழகங்களை அமைத்தவர்.**

**மோகனூர் கிளைக் கழகம் அமைத்து, அதன் செயலாளர் பின்னர் மாவட்ட பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**1996ல் நாமக்கல் தொகுதியில் கழக சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# பாலஸ்தீனத்தின் கடைசிக் குடிமகன்...

பாலத்தீனத்துக்குள்
பசி நுழையலாம் பட்டினி நுழையலாம்
அதைத் தீர்க்கும்
உணவுக்கு அனுமதி கிடையாது.
பிணி நுழையலாம் வலி நுழையலாம்
அதை நீக்கும்
மருந்துக்கு அனுமதி கிடையாது.

அங்குப்
பகல்கள் வரலாம்;ஆனால்
இரவின் கட்டளைப்படி
நடக்க வேண்டும்.
மரணம் மட்டுமே
எந்த நேரத்திலும் வீதிகளுக்குள்,
வீடுகளுக்குள்
வரலாம்
விருப்பம்தீரப்
பைகளை நிரப்பிக்கொண்டு
திரும்பலாம்.

மத்திய தரைக்கடல்கூட
இசுரேல்
கறுப்புச்சட்டம் போட்டால்
அதற்குக்
கட்டுப்பட்டு ஓடையாகிவிட வேண்டும்.

இதோ!
பிணந்தின்னி
அலுமினியக் கழுகு
உயிர்களைக் கொத்திப்போக
வானில் வந்துவிட்டது

சிறுவன்
பந்தோடு வந்துநிற்கிறான்
வந்து தெருவில், திடலில்
நேற்றுவரை அவனோடு விளையாடிய
பாலர்பட்டாளத்தைக் காணோமே!
வானத்தோடு
பேசிக்கொண்டிருந்த மாடமாளிகைகள்
எலும்புகள் நொறுங்கித்
தசைகள் பிதுங்கிச்
சரிந்துவிட்டனவே!
விளையாட்டு
வேளைகள் குருதி கொட்டியதால்
காஸா பூமி
கலங்கித் துடிக்கின்றது.

அம்மா இல்லை
அப்பா இல்லை
உடன்பிறந்த அக்கா அண்ணன்
தம்பி தங்கை யாருமே இல்லை
இல்லைகளின்
மொத்தத் தொகையில் மிஞ்சி
என்ன
இருக்கிறது?





தவிப்பு, தடந்தெரியாப் பாதை,
விம்மல், விளக்கில்லா இருள்,
துயரம்,துடைக்கும் விரல்கள்இல்லாத்
தனிமை;
இவை....இவை மட்டுமே இருக்கின்றன.

விளையாட்டு
வெண்கரடிப் பொம்மை மட்டும்
இருக்கிறது
அதுவும்
தான் அழுதால்
தாங்கமாட்டாமல்
அவள் அதிகம் அழுவாளே என்று
அழுகையை
அடக்கிக்கொண்டு இருக்கிறது.

பேசினால்
துயரம் பிரளயமாய்ப் பெருகிவிடுமே
என்று
வார்த்தைகளை வெளியிடாமல்
அந்தப் பொம்மை
பேசாத பொழுது பிணம் சுமந்து
கூடவே நிற்கிறது.

ஒதுங்கு இடமில்லை
பதுங்கு குழிகள் இல்லை
ஆதரவற்றவராய்ப் பிடிபட்டோர்
அடைக்கப்பட்ட
அகதி முகாம்கள்மீது இசுரேல் படை
தாக்குகிறது.

இந்தநொடி வரலாம்
அடுத்தநொடி வருவதற்குள் வரலாம்
தலைமேல் வந்து
விழலாம் வெடிகுண்டு என்பதனால்
குழந்தைக்குமுன் மடிய
இந்தப்பொம்மை கூடவே இருக்கிறது.


பாலத்தீனத்தின்
கடைசிக் குடிமகனாக
மடியப்போவது
இந்தக் குழந்தையா?
இல்லை
இதன் கையில் உள்ள
இந்தப் பொம்மையா?



**கவிப் பேரருவி**
**ஈரோடு தமிழன்பன்**



சென்னை மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்துக்கான பணிகளின் போது எதிர்பாராத விதமாக காயமுற்ற திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் சந்திரனை திருவள்ளூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து நலம் விசாரித்தார். இந்த சந்திப்பின் போது கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தொலைபேசி வாயிலாக சந்திரனிடம் நலம் விசாரித்தார். உடன் மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர், வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. மற்றும் கழகத்தினர் உள்ளனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை மக்கள் பயன்பெறுகிற வகையில் கொண்டாடும் விதமாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தி.மு.க. இளைஞரணி சார்பாக ஒவ்வொரு தொகுதியிலும் "கலைஞர் நூலகம்" அமைத்து வரும் பணிக்கு வலுசேர்க்கும் விதமாக, கழக தீர்மானக்குழு சார்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் 10 மாவட்டங்களில் "கலைஞர் நூலகம் அமைக்க ரூ.10 லட்சம் மற்றும் இளைஞரணி 2 ஆவது மாநாட்டு நிதியாக ரூ.1 லட்சத்துக்கான காசோலைகளை இளைஞரணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கழக தீர்மானக் குழுத் தலைவர் தமிழ்தாசன், தீர்மானக் குழுச் செயலாளர்கள் மீ.அ.வைதியலிங்கம், கீரை விஸ்வநாதன், அக்ரி கணேசன், உறுப்பினர் செஞ்சி சிவா ஆகியோர் வழங்கினர். அதுபோது அமைச்சர்கள் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி. மற்றும் வெற்றி செல்வன், முன்னாள் அமைச்சர் வ.சத்தியமூர்த்தி, சுப.த.திவாகரன், இரா.சேதுநாதன், பார் இளங்கோ உள்ளிட்ட தீர்மானக் குழு நிர்வாகிகள் உள்ளனர்.

### புதுக்கோட்டை மாவட்டத்தில்

# ‘நடப்போம் நலம் பெறுவோம்’ நடை பயிற்சி திட்டம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தனர்! கே.கே.செல்லப்பாண்டியன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, நவ.7-

புதுக்கோட்டை மாவட்டம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் "நடப்போம் நலம் பெறுவோம்" 8 கி.மீ. சுகாதார நடைபயிற்சியினை அமைச்சர்கள் எஸ்.ரகுபதி சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர்

மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் கலந்துகொண்டார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் "நடப்போம் நலம் பெறுவோம்" 8 கி.மீ. சுகாதார நடைபயிற்சியினை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா முன்னிலையில் புதுக்கோட்டை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்டவிளையாட்டரங்கிலிருந்து 04.11.2023 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தனர்.

உலக சுகாதார அமைப்பின் பரிந்துரையின்படி வாரத்தில் ஐந்து நாட்கள் தினமும் 30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வது உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். தினமும் 8 கி.மீ. வேகமாக நடப்பது உயர் ரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் போன்ற தொற்றா நோய்களை தடுக்கவும், மன அழுத்தத்தைக் குறைக்கவும் உதவுகிறது. தொடர் நடைபயிற்சி செய்வது உயர் ரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்களால் ஏற்படும் சிக்கல்களை 30 சதவீதம் வரை குறைக்க உதவும். ஆரோக்கியமான வாழ்க்கை வாழ முறையாக நடைபயிற்சி செய்வதை பொதுமக்களிடம் ஊக்குவிக்கும் வகையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுதுறையின் சிறப்புத் திட்டமாக "நடப்போம் நலம் பெறுவோம் 8 கி.மீ. சுகாதாரநடைபாதை" திட்டம், அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

அதன்படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, பெசன்ட் நகர், டாக்டர். முத்துலட்சுமி பூங்காவில் "நடப்போம் நலம் பெறுவோம்" திட்டத்தை துவக்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டத்தில் காணொளி காட்சி மூலமாக நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா முன்னிலையில் புதுக்கோட்டை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கிலிருந்து "நடப்போம் நலம் பெறுவோம் 8 கி.மீ. சுகாதார நடைபயிற்சியினை கொடியசைத்து துவக்கி வைத்தனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் "நடப்போம் நலம் பெறுவோம்" திட்டத்திற்கான 8 கி.மீ. தூரம் கொண்ட பாதை மாவட்ட விளையாட்டு அரங்கத்திலிருந்து துவங்கி விளையாட்டு மைதானத்தை ஒரு சுற்று வந்து மாலையீடு சென்று திரும்பவும் அதே வழியாக பால்பண்ணை ரவுண்டானா சென்று மீண்டும் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் 8 கி.மீ நடைபயிற்சியினை நிறைவு செய்தனர். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் மாலையீடு மற்றும் விளையாட்டு அரங்கில் 2 மருத்துவக்குழுக்களும், நடைபயிற்சி மேற்கொள்ளும் வழியில் 4 இடங்களில் குடிநீர் வசதியும் நடைபயிற்சி நிறைவடைந்தவுடன் பங்கேற்றவர்களுக்கு மூலிகை சூப் மற்றும் குடிநீர் வழங்கப்பட்டது.

மேலும் பிரதிமாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று -'நடப்போம் நலம் பெறுவோம்' 8 கி.மீ. (Health Walk)திட்டம்சுகாதாரத் துறை, அனைத்துதுறைகள், நடைபயிற்சி மேற்கொள்வோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் அனைத்து பொது மக்களும் ஒருங்கிணைந்து இத்திட்டத்தில் பங்கேற்று (Health Walk) திட்டத்தை மாபெரும் மக்கள் இயக்கமாக மாற்றி அனைவரின் ஆரோக்கியத்தை மேம்படுத்த ஒன்றாக இணைவோம் என்று அமைச்சர் பெருமக்கள் கேட்டுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞரும், புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளருமான கே.கே.செல்லபாண்டியன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) மருத்துவர் ராம்கணேஷ் (புதுக்கோட்டை), மருத்துவர் நமச்சிவாயம் (அறந்தாங்கி), மாவட்ட விளையாட்டு அலுவலர் செந்தில்குமார், நகராட்சி ஆணையர் ஷியாமளா, வட்டாட்சியர் கவியரசன், ஆ.செந்தில், க.நைனா முகமது, என்.சாத்தையா, மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### செஞ்சி, திண்டிவனம் தொகுதிகளில் நடைபெறும்

# வாக்காளர் பட்டியல் பெயர் திருத்தம் சிறப்பு முகாம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

செஞ்சி, நவ. 7-

பெயர் பட்டியலில் பெயர் சேர்த்தல் நீக்குதல் திருத்தம் செய்தலுகான சிறப்பு முகாம் 4 , 5ஆம் தேதியும் மற்றும் எதிர்வரும் 18.19. ஆகிய தேதிகளில் நடைபெறும் என தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார். அதன்படி விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சி தொகுதியில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், திருத்தல் மற்றும் நீக்குதல், தொடர்பான சிறப்பு முகாம் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற உள்ளது.

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தொகுதியில் செஞ்சிகாந்தி பஜார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,சக்கராபுரம் அரசு நடுநிலைப்பள்ளிகளில்நடைபெற்ற வாக்காளர் பெயர் பட்டியலில் பெயர்சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம் செய்ததற்கான முகாமினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து திண்டிவனம் தொகுதி ஒலக்கூர் ஒன்றியம் அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற வாக்காளர் பெயர் பட்டியல் சுருக்க திருத்தம்பணியைஅமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.அப்போது புதிதாக வரப்பெற்ற மனுக்கள் விவாதம் குறித்தும் முகவரி மாற்றம் விண்ணப்பம் குறித்தும் வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும் வாக்காளர் பெயர் பட்டியலில் இறந்தவர்களை கண்டறிந்து அந்த பெயர்களை நீக்குவதற்கு அவர் அறிவுறுத்தினார்

ஆய்வின்போதுமுன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீத்தாபதி சொக்கலிங்கம், ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் செஞ்சி வட்டாட்சியர் ஏழுமலை,தேர்தல் பிரித தனி வட்டாட்சியர் ரவி,வருவாய் ஆய்வாளர் கோவிந்தன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, கிராம நிர்வாக அலுவலர் ராஜாராம் பேரூராட்சி கவுன்சிலர் நூர்ஜகான் ஜாஃபர், மகாலட்சுமி கமலநாதன், பொன்னம்பலம்,வார்டு செயலாளர் ஜி.டி.தனசேகரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன், தொண்டரணி பாஷா, முன்னாள் கவுன்சிலர் பத்மநாபன்,வாக்குச்சாவடி நிலைய அலுவலர் அஸ்கர், ஆட்சிப்பாக்கம்ஊராட்சி மன்ற தலைவர்பொன்னப்பன், தலைமையாசிரியர் வெண்ணிலா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### அ.சீனிவாசன் வரவேற்புரை! கலைஞர் நூற்றாண்டு விழா!

# சேலம் கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் பேச்சு - கட்டுரைப் போட்டி!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் துவக்கி வைத்தார்!

சேலம், நவ. 7-

சேலம் கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநில அளவிலான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டி வாழப்பாடியில் உள்ள கிழக்கு மாவட்ட அலுவலகம் தளபதி மு .க. ஸ்டாலின் அறிவாலயம் அரங்கில் நடைபெற்றது. போட்டிக்கு சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் போட்டியை துவக்கி வைத்தார், போட்டிக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன் வரவேற்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் கருணாநிதி, மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ் குமார், சின்னதுரை, மாநில மாணவரணி துணைச் செயலாளர் தமிழரசன், ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணை செயலாளர், ஏற்காடு தொகுதி பார்வையாளர் புஸ்பராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சங்கர், பொதுக்குழு உறுப்பினர்கள் டாக்டர் வீர பாண்டி மலர்விழி ராஜா, சந்திரமோகன், முத்து லிங்கம், கோபால், ஒன்றிய செயலாளர்கள் ரத்தின வேல், விஜயகுமார், ராஜா, பழனிசாமி, பாலமுருகன் , பேரூர் செயலாளர்கள் செல்வம், சுப்ரமணியன், பாபு, மாவட்ட நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம் விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் ரமேஷ், சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் முனைவர் வரத. ராஜசேகர், விவசாய தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் தனசேகரன், பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் செல்வ மணி,

சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட அமைப்பாளர் சையத் சாவலி மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் கிஷோர், அருண், பிரசாத், மகேஸ்வரன், சரண்யா, பொறியாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் அன்பழகன், தர்மசாஸ்த்தா, விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் முனைவர் தங்கபாண்டியன், ரமேஷ்பாபு, செல்வமணி, செல்வகுமார் கிருஷ்ணவேணி, அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் வேலவன், ஜெயகுமார், சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட துணைத் தலைவர் கோபிநாத், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட துணை அமைப்பாளர் ஜுபைர், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் சுரேஷ், ஏற்காடு சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஆதிசங்கர், பேரூராட்சி கவுன்சிலர் ரஞ்சித்குமார், மாவட்ட பிரதிநிதி அப்பாதுரை, பி.டி.ஏ. பொருளாளர் சுப்பிரமணியன், பில்லா பிரசாந்த், பூபாலன், தினேஷ்குமார், அருண்குமார், சூர்யா, மணிகண்டன், சந்தோஷ் குமார், தினேஷ்குமார், ஆதி, பிரபாகரன், சரவணன், திருக்குமரன், லோகநாதன், இளையராஜா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி புதுச்சேரி மாநில பொறியாளர் அணி நடத்திய

# பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா வழங்கினார் !

புதுவை, நவ. 7-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி, புதுச்சேரி மாநில தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற பொறியியல் மாணவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா பரிசுத் தொகை, கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை இந்த ஆண்டு முழுவதும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று அறிவுறுத்தியதின் அடிப்படையில், புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக புதுச்சேரி மாநில திமுக பொறியாளர் அணி சார்பில் பொறியியல் மாணவர்களுக்கான மாபெரும் பேச்சுப்போட்டி நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு தொடங்கி மாலை 5 மணி வரை மதகடிப்பட்டு மணக்குள விநாயகர் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு வருகை புரிந்தவர்களை மாநில பொறியாளர் அணி அமைப்பாளர் அருண்குமார் வரவேற்றார். திருபுவனைத் தொகுதி செயலாளர் செல்வபார்த்திபன், பொறியாளர் அணி நிர்வாகிகள் மணிகண்டன், உமாபதி, முகுந்தன், சுவர்ணராஜ், எழிலரசன், அர்ஜுன் (எ) ரங்கராஜ், பிரகாஷ், ரமேஷ், பிரபாகரன், வீரமணி கண்டன், சுவாதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

புதுச்சேரி மாநில திமுக இலக்கிய அணி அமைப்பாளர் கலைமாமணி சீனு. மோகன்தாசு அவர்கள் தலைமையில் தமிழ்மாமணி வேல்முருகன், கலைமாமணி நெய்தல் நாடன், பேராசிரியர்கள் அரங்க முருகையன், வேல் கார்த்திகேயன், உறு அசோகன், ரேவதி, விசாலாட்சி, எழில் வசந்தன், ஏழுமலை, குணசேகர், திருநாவுக்கரசு, முத்தையாசாமி, முருகமணி ஆகியோர் ஐந்து குழுக்களாக பிரிந்து பேச்சுப் போட்டியை நடத்தினார்கள்.

இப்போட்டியில் புதுச்சேரியில் உள்ள அரசு மற்றும் தனியார் கல்லூரிகளைச் சேர்ந்த இளங்கலை, முதுகலை பொறியியல் மாணவர்கள், பாலிடெக்னிக், ஐ.டி.ஐ. மாணவர்கள் என 500 மாணவர்கள் கலந்து கொண்டு, தொழில்நுட்பக் கல்விக்குத் தோள் கொடுத்தவர் கலைஞர், தொழில் துறையை உயர்த்தியவர் தமிழினித் தலைவர், திராவிட மாடலும் திறன்மிக்க கல்வியும், தெற்குச்சூரியன், கலைஞரும் தமிழும் என்ற தலைப்புகளில் பேசினார்கள்.

மூன்று சுற்றுக்களாக நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற பொறியியல் மாணவர்களுக்கு மாலை 5 மணிக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த பரிசளிப்பு விழாவில், திமுக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா, தலைமைக் கழக மாநில பொறியாளர் அணித் தலைவர் துரை. கி. சரவணன், ஆகியோர் கலந்து கொண்டு, முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கு பரிசுத் தொகை, கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கி வாழ்த்தி பேசினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் இரா. செந்தில்குமார், மணக்குள விநாயகர் தொழில்நுட்ப கல்லூரி முதல்வர் மலர்க்கண், பேராசிரியர் வள்ளி, ஜெயக்குமார், பேராசிரியர் பிரியா மற்றும் பூ. மூர்த்தி, கே.எம்.பி.லோகையன், ப. செல்வநாதன், பா.செ.சக்திவேல், சி.கோபால், வே. கார்த்திகேயன், எஸ்.தர்மராஜன், பெ.பழநி, நா. கோபாலகிருஷ்ணன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், இரா. சக்திவேல், வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், எல். மணிகண்டன், து. சக்திவேல், கோ. தியாகராஜன், ர. சிவக்குமார், ரா. ஆறுமுகம், ப.வடிவேல், ஜெ.மோகன், வெ.சக்திவேல், க.ராஜாராமன், பி.சா. இளஞ்செழிய பாண்டியன், ம.கலைவாணன், எஸ்.பி. மணிமாறன், வெ.குலசேகரன், கி.சங்கர் (எ) சிவசங்கரன், ந.செந்தில்முருகன், ந. ரவிச்சந்திரன், வீரன் (எ) வீரய்யன், சு.ரமணன், ம. மதிமாறன், அண்ணா அடைக்கலம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி அளவில் வெற்றி பெற்றவர்கள் மண்டல அளவில் நடைபெறும் போட்டியில் பங்குபெறலாம். இறுதிச் சுற்றில் வெல்பவர் ரூ. 5 லட்சம் ரொக்கம் மற்றும் சுழற்கோப்பையும் பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சி முடிவில் பொறியாளர் அணித் தலைவர் பூபாலன் நன்றி கூறினார்.




திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், மருதுறை ஊராட்சி, கிலாக்காட்டில் கனிமம் மற்றும் சுரங்கம் நிதியின் சார்பில் 34 இலட்சம் மதிப்பீட்டில் மருதுறை ஊராட்சி எல்லை பிள்ளையார் கோவில் முதல் கிலாக்காடு வரையுள்ள மண்சாலையை தார்ச்சாலையாக மேம்பாடு செய்யும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலக்குழுத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கிருஷ்ணவேணி வரதராஜ், வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சி.கருணை பிரகாஷ், ஊராட்சி மன்றத்தலைவர் செல்வி சிவக்குமார், ஒன்றிய அவைத்தலைவர் ரவி உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில், கூட்டுறவு மெகா பட்டாசுக் கடையினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்து, முதல் விற்பனையினை துவக்கி வைத்தார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இராஜேந்திர பிரசாத், நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிதைப்பித்தன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# கற்றுத் தெளிவோம் கலைஞரின் இயக்கவியல்!

நீரை.மகேந்திரன்

ஓவியம் : ரவி பேலட்



**க**லைஞரின் காலம் குறித்து, அறிந்துகொள்வதற்கு முயற்சிக்கையில், 1977-ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின்னர், 1989-ஆம் ஆண்டு தி.மு.க. மீண்டும் ஆட்சி அமைக்கும் வரை, சுமார் 13 ஆண்டு காலம் அவரின் அரசியல் முடக்கம் இருந்ததாக ஒரு மாயத் தோற்றத்தை சிலர் உருவாக்கியுள்ளதை வாசிக்க முடிந்தது.

தனது இறுதிக் காலம் வரை தொடர்ச்சியாக ஆற்றலுடன் இயங்கிக் கொண்டிருந்த கலைஞர், அந்தக் குறிப்பிட்ட காலகட்டத்தில் வெளிப்படுத்திய ஆற்றல் அணுத்துகள்களுக்கு நிகரான வீச்சினைக் கொண்டிருந்தது. ஆனால், போலியான வரலாற்றுக் குறிப்புகளைத் தொடர்ந்து பேசி வருபவர்களுக்குத் தரவுகள் அச்சம் தரலாம்.

நெருக்கடி நிலை காலத்துக்குப் பின்னர், 1977-ஆம் ஆண்டு தேர்தலில், சட்டமன்றத்துக்கான ஆட்சி அதிகாரத்தினை கழகம் பெறவில்லை என்றாலும், மத்தியில் ஜனநாயகம் வென்றதாக தொண்டர்களுக்குக் கடிதம் எழுதினார். ஜனநாயக வெற்றியைக் கொண்டாடும்படியும் அழைப்பு விடுக்கிறார். அதனால், தேர்தல் வெற்றி தோல்விகள் அவரை நிலைகுலைய வைத்ததில்லை என்பதைப் புரிந்து கொள்வது எளிது. அதேநேரத்தில், அதன் பின்னர் அவரிடமிருந்து வெளிப்பட்ட பேராற்றலே கற்றுக் கொள்ள வேண்டிய பாடமாக உள்ளது.

## மீண்டும் எழுந்த தேசிய அரசியல்

தேசிய அரசியலின் செல்வாக்கைத் தளர்த்தி, மாநிலக் கட்சிக்கான வரலாற்றை எழுதுகிறது கழகம். ஆனால், 1977-ஆம் ஆண்டு உருவான தேசிய அரசியல் சூழல், அப்போது எம்.ஜி.ஆருக்குச் சாதகமானது. நாடாளுமன்றத்துக்கு ஒரே ஓர் உறுப்பினரை மட்டுமே கழகத்தால் அனுப்ப முடிந்தது.

தேர்தல் தோல்வியை முன்வைத்து, கழகத்திலிருந்து கலைஞர் விலக வேண்டும் என அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு கையெழுத்து இயக்கத்தையே நடத்தியுள்ளனர். அவரைச் சுற்றிப் பின்னப்பட்ட அவ்வளவு சூழ்ச்சிவலைகளும், தமிழ்நாட்டு வரலாற்றில் இருந்து கழகத்தை அப்புறப்படுத்தக் கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் என்பதை வரலாறெழுதிகள் குறிப்பிடத் தவறியவை.

ஆனால், நிகழ்ந்தது என்னெவெனில், தி.மு. கழகத்தில் இருந்து கலைஞரை நீக்க வேண்டும் என விருப்பப்பட்டவர்கள்தான் வெளியேற நேர்ந்தது. ஏனெனில் தொண்டர்கள் கலைஞரின் பக்கம் நின்று இருந்தனர். **‘காத்திருக்கிறேன், கண் பூத்துப் போகும் வரையில்’** என அவர்களுக்குக் கடிதம் எழுதினார் கலைஞர்.

1969-ஆம் ஆண்டுகளில் கழகத்தின் தலைமைக்கு ஏற்பட்ட போட்டியையும் நெருக்கடிகளையும் வென்று, தனது ஆளுமையை நிரூபித்தவர் கலைஞர். ஆனால், 77-ஆம் ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட அழுத்தம், பல சூழ்ச்சிகளைக் கொண்டதாக இருந்தது. அவற்றைச் சமாளித்து வெளிவந்ததுதான் அவர் ஆற்றலுக்குச் சான்று.

முக்கிய நிர்வாகிகள் கழகத்திலிருந்து விலகியதால் ஏற்பட்ட சலசலப்பு, அதன்பின்னர் அவர் மீது பொய்வழக்குகளால் கொண்டுவரப்பட்ட விசாரணை கமிஷன், இவ்வளவு சங்கடங்களுக் கிடையே சட்டமன்ற ஜனநாயக நடவடிக்கைகள் என அவர் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கிறார்.

## வழிநடத்திய கலைஞர்

உதாரணமாக, இந்தித் திணிப்பு விவகாரத்தை எடுத்துக் கொள்ளலாம். 1967-ஆம் ஆண்டில் அரசு அலுவலகங்களில் இந்தி மொழியைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும் என அப்போதைய பிரதமர் மொரார்ஜி தேசாய் முயற்சி செய்தார். அதை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில்தான் எம்.ஜி.ஆர் அரசு இருந்தது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் என்கிற முறையில், அதற்கு எதிராக மிகப்பெரிய சட்டமன்றப் போராட்டத்தை முன்னெடுத்தார் கலைஞர்.

1979-ஆம் ஆண்டில், இட ஒதுக்கீடு சட்டத்தை நீர்த்துப்போகச் செய்யும் வகையில் பொருளாதார அடிப்படையிலான இட ஒதுக்கீடு முன்வரவு சட்டமன்றத்தில் முன் வைக்கப்படுகிறது. 70 ஆண்டுகாலச் சமூகநீதிப் போராட்டத்தில் மிகப்பெரிய பின்னடைவை உருவாக்கக் கூடியது என, அதற்கு எதிராக மிகச்செறிவான போராட்டங்களை நடத்துகிறார்.

அப்போது சட்டமன்றத்தில் கலைஞர் ஒரு மணி நேரம் பேசினால், அவருக்குப் பதில் அளிக்க அமைச்சர்களுக்குப் பலமணி நேரம் தேவைப்பட்டது என்கிற நெருக்கடியை உருவாக்கினார்.

## அவதூறுகளுக்கு எதிராக

சட்டப் போராட்டம், சட்டமன்றப் போராட்டங்கள் மட்டுமல்ல, அவருக்கு எதிராகச் சமூக வெளிகளில் தொடுக்கப்பட்ட அவதூறுகளுக்கு எதிராகவும் அவர் ஒருவரே போராடியதைப் பார்க்கலாம். அவரைத் தாக்குவதற்காகவே பத்திரிகைகள் வளைக்கப்பட்டன. புதிய பத்திரிகைகள் தொடங்கப்பட்டு, அதில் தொடர்ந்து அவரைப் பழித்துச் செய்திகள் வந்தன.

1980-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி மொத்த தொகுதிகளையும் வென்றது. அதுபோல், அப்போது நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கழகம் வெற்றி பெற வேண்டியது. ஆனால், சில சூழ்ச்சிகளால் வெற்றிபெற முடியவில்லை. அந்தச் சூழலை **‘ஒரு மகத்தான தவறு’** என ‘நெஞ்சுக்கு நீதி’யில் குறிப்பிடுகிறார் கலைஞர்.

> **அரசியல், மக்கள் வாழ்க்கையில் மாற்றங்களை உருவாக்க வேண்டும் எனில், ஒரு தலைவன் எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.**

1981-ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழர்களின் மீதான தாக்குதல்களுக்கு எதிராக, தமிழ்நாட்டில் மிகப்பெரிய போராட்டத்தை நடத்தியது கழகம். தடையை மீறி, மறியல் போராட்டத்தை நடத்தி சிறைச் சென்றார் கலைஞர். கைது செய்யப்பட்டு 15 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டார். உணர்ச்சிப் பெருக்கில் பல தொண்டர்கள் தீக்குளித்தனர். அவை உணர்வுபூர்வமான நாட்களாக இருந்தன. இந்தப் போராட்டம் செப்டம்பர் மாதம் நடந்தது எனில், அடுத்த நான்கு மாதங்களில் தமிழ்நாட்டையே முடக்கிய ‘திருச்செந்தூர் நடைப்பயண’ப் போராட்டத்தினை முன்னெடுத்தார்.

திருச்செந்தூர் கோயிலில், அறநிலையத்துறை அதிகாரியின் மர்ம மரணத்துக்கு நீதி கேட்டு 1982-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கிய நடைப் பயணப் போராட்டம், தென் தமிழ்நாட்டில் மிகப்பெரிய உணர்ச்சி அலைகளை உருவாக்கிய போராட்டமாக இருந்தது.

1983-ஆம் ஆண்டு, ஜூலை மாதத்தில் ஈழத் தமிழர்களுக்காக மிகப் பிரமாண்டமான ஊர்வலத்தை நடத்தினார். அதே காலகட்டத்தில் ஈழத் தமிழர் போராட்டத்துக்காக கலைஞர், பேராசிரியர் ஆகியோர் தங்கள் எம்.எல்.ஏ. பொறுப்புகளைத் துறந்தனர். அந்த ஆண்டில் மட்டும் இரண்டு முறை சிறை நிரப்பும் போராட்டங்கள் நடைபெற்றன. 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட கழகத்தினர் சிறை சென்றனர்.

## அலைகளை உடைத்த தலை

1984 - ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் களம் மிகப்பெரிய அனுதாப அலையை உருவாக்கி இருந்தது. தி.மு.க உயிரோட்டமாக இருந்தும் எதிர்க்கட்சியாகவே அமர முடிந்தது. ஆனால், சட்டமன்றத்துக்கு எழுந்த அனுதாப அலை, அடுத்த இரண்டு ஆண்டில் அறிவிக்கப்பட்ட உள்ளாட்சித் தேர்தலில் வேலை செய்யவில்லை.

1986-ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில் கழகம் புது பலத்துடன் எழுந்து நின்றது. நகர சபை தேர்தல்களில் 97 இடங்களில் 63 இடங்களைத் தி.மு. கழகம் கைப்பற்றியது. நகரப் பஞ்சாயத்துத் தேர்தல்களில் 217 இடங்களிலும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தேர்தலிலும் தி.மு.கழகமே முன்னணியில் இருந்தது. இப்படியாகக் கட்சியின் உயிரோட்டத்தையே தனது மூச்சாகக் கொண்டு செயல்பட்ட தலைவராக எழுந்து நின்றார் கலைஞர்.

ஆட்சியில் இல்லாத போதும் இந்திக்கு எதிரான மிகப்பெரிய போராட்டங்கள், அநீதி சட்டங்களை எதிர்த்து கண்டன முழக்கம், ஆர்ப்பாட்டம், பேரணி, ஒன்றிய, மாநில அரசியலுக்கு எச்சரிக்கை என ஒவ்வொரு நாளும் மக்களின் கவனத்தை ஈர்த்தவராக, தொண்டர்களை இயக்கியவராக இருந்தவர்.

எம்.ஜி.ஆரின் ஆட்சி என்பது 1977 -ஆம் ஆண்டு ஜூன் 30-ஆம் தேதி தொடங்கி அவர் மரணம் அடையும் வரை 1987-ஆம் ஆண்டு டிசம்பர் 24-ஆம் தேதி வரை நீடித்தது. அந்தப் பதினோரு ஆண்டுகளும் 1987 க்குப் பிறகு 1989 வரையிலான இரண்டு ஆண்டுகளும் தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகப் பெரிய தேக்கத்தை உருவாக்கி இருந்தன. ஆனால், மிகப்பெரிய அலை இருந்ததாகக் கூறப்படும் எல்லாவற்றையும் உடைத்து கழகத்தை உயிரோட்டமான இயக்கத்தில் வைத்திருந்தவர் கலைஞர்.

அரசியல், மக்கள் வாழ்க்கையில் மாற்றங்களை உருவாக்க வேண்டும் எனில், ஒரு தலைவன் எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும். அந்த இயக்கவியலை கலைஞரிடமிருந்து கற்றுக் கொள்வது நம்மை வழிநடத்தும்.

## திராவிட இயக்க இதழ்கள் - மாலைமணி!



1949-ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்படுவதற்கு முன், அதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது கழகத்துக்கென்று ஓர் ஏடு இல்லையே என்ற குறை, பேரறிஞர் அண்ணாவுக்கு இருந்தது. அதைப் போக்கும் வகையில், சுயமரியாதை வீரர் டி.எம்.பார்த்தசாரதி என்பவர், சென்னை மண்ணடி முத்துமாரி செட்டித் தெரு என்ற முகவரியிலிருந்து 1949-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் வாரத்தில் ‘மாலைமணி’ என்ற நாளேட்டைத் தொடங்கினார். அதற்கு ஆசிரியராக அண்ணா இருந்தார். பிறகு, பல்வேறு காலகட்டங்களில் நாவலர் நெடுஞ்செழியன், கே.ஜி.இராதாமணாளன் ஆகியோர் இருந்தனர். இதழ் வெளிவந்து, சில ஆண்டுகளுக்குப் பிறகு நஷ்டம் ஏற்பட்டதால் நின்றுபோனது.

சில ஆண்டுகள் கழித்து, பி.எஸ்.இளங்கோ என்ற கழகத் தோழர் ‘மாலைமணி’யை வார இதழாக அரசு அனுமதி பெற்று நடத்தினார்.

அந்த இதழ் 1 X 4 என்ற டெம்மி சைஸ் அளவில் 16 பக்கங்களுடன் முழுக்க முழுக்கத் தலைவர்களின் உரைவீச்சுகளை மட்டுமே தாங்கி வந்தது. ‘அறிஞர் அண்ணா அவர்களின் ஒரே ஒரு பேச்சை மட்டுமே வாரா வாரம் வெளியிட்டதால், 50 ஆயிரம் பிரதிகள் விற்றன’ என்று என்.வி.கலைமணி என்பவர் தனது **‘இதழியல் கலை அன்றும் இன்றும்’** என்ற நூலில் பதிவு செய்துள்ளார்.

மேலும் அவர், ‘அண்ணா அவர்கள் பேச்சை நேரில் கேட்டு இன்புறுவது போல, கட்சித் தோழர்களும், தலைவர் அவர்களே என்று அண்ணா பேச ஆரம்பித்ததிலிருந்து, அவர் முடிக்கும் வரையுள்ள பலதரப்பட்ட கருத்துகளைக் கட்சிக்காரர்கள் ஒருசேரப் படிக்கும் ஒரு வழக்கம் இருந்தது என்கிறார்.

நாளிதழாக வந்தபோது இதழின் பெயருக்குக் கீழே ‘திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்’ என்ற வரியைத் தாங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவருடன் சிறை!

**க**ழகம் களம் கண்ட இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் என் தாத்தா திருமால் அவர்களும் பங்கேற்றுப் போராடியுள்ளார். 1953-ஆம் ஆண்டு நடைபெற்ற மும்முனைப் போராட்டத்தில், கலைஞர் தலைமையில் நடைபெற்ற கல்லக்குடி ரயில் மறியல் போராட்டத்தில் கலைஞருடன் என் தாத்தாவும் சிறை சென்றார். சிறையிலிருந்து விடுவிக்கப் பட்ட பிறகு, இந்தப் படம் எடுக்கப்பட்டது. என் வீட்டை இன்றைக்கும் அலங்கரிக்கும் புகைப்படமாக இந்தப் படம் விளங்குகிறது.



பூபாலன்

**-பூபாலன், மணப்பாறை, திருச்சி மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஓய்வறியா சூரியன்!

**1951-ஆம் ஆண்டு தொடக்கத்தில், ‘பிரச்சாரம்’, ‘பொதுக்கூட்டம்’, ‘நாடகம்’, ‘மாநாடு’ எனத் தொடர் பணிகளால் ‘ப்ளூரசி’ நோயால் பாதிக்கப்பட்டார் கலைஞர். ஓராண்டு காலம் ஓய்வெடுக்க வேண்டும் என மருத்துவர்கள் எச்சரிக்கை செய்தனர். கலைஞரை சந்தித்து நலம் விசாரித்த அறிஞர் அண்ணா, கலைஞர் பூரண நலம்பெறும் வரை, ஓராண்டு காலத்துக்குப் பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளுக்கு அழைக்க வேண்டாம் எனத் ‘திராவிட நாடு’ இதழில் அறிவிப்பு வெளியிட்டார். மருத்துவர்களின் அறிவுரை, அண்ணாவின் வேண்டுகோள் ஆகியவற்றை மீறி, ஜூலை மாதத்தில் இருந்தே மீண்டும் பழைய வேகத்தில் இயங்கத் தொடங்கினார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 293




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21-23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131